விடை—

மாண்புமிகு திரு. அ. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் கீழ் இயங்கும் புதூர் விளாத்திகுளம் அரசு மருத்துவ மனை உட்பட அனைத்து மருத்துவமனைகளுக்குத் தேவை யான வெறிநாய்க்கடி/பாம்புக்கடிக்கான விஷ முறிவு மருந்துப் பொருட்களை சென்னை கிண்டியிலுள்ள கிங் நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக ஆணைகள் ஏற்கெனவே வழங் கப்பட்டுள்ளன.

30—

ஏற்காடு தொகுதி நீர்முள்ளிக்குட்டை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்தல்

*22460—திரு. செ. பெருமாள் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் நீர்முள்ளிக்குட்டை கிரா மத்தை மையமாக வைத்து ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

36—

மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஒரு அரசுத் தேர்வு மையம் அமைத்தல்

*19519—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, மொடக்குறிச்சி அவல்பூந்துறை, அரச்சலூர் ஆகிய ஊர்களில் உள்ள மேல்நிலைப் பள்ளி மாண வர்கள் அரசுத் தேர்வு எழுத ஈரோடு செல்ல வேண்டியிருப்பதால், மொடக்குறிச்சி ஒன்றியத்தில் ஏதாவது ஓர் இடத்தை அரசு தேர்வு மையமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா ?

[1994 மார்ச் 18]

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மார்ச் 1994 தேர்வுக்கு அரச்சலூர் அரசு மேல்நிலைப் பள்ளி, அவல்பூந்துறை அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் வெள்ளோடு அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகள் இணைத்து பள்ளியூத்து நவரசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியுடன் இணைத்து புதிதாக இவ்வாண்டு தேர்வு எழுத மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையம் மொடக்குறிச்சி தொகுதியில் அமைக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

2. தகவல் கோரல்.

"எக்கட்சியையும் சாராத உறுப்பினர்கள்" என அறிவிக்கப்பட்ட முன்னால் அமைச்சர்கட்கு இருக்கைகள் ஒதுக்கீடு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்.

*திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் தொடங்கியிருக்கிறது. விவாதங்கள் நிறைவுபெற்று, நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு, இந்த அவை இன்னும் 2மாத காலம் நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இங்கே விவாதங்கள் நடைபெற வேண்டும். அமைதியாக நடைபெற வேண்டும். விவாதங்கள் நல்லமுறையிலே நடப்பதற்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பை பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். இங்கே அவையிலே மூத்த உறுப்பினர்கள், 30 ஆண்டுகளுக்கு முன்னே தேர்ந்தெடுக்கப்பட்ட அவை முன்னவர் நாவலர் அவர்கள் இருக்கிறார்கள்.

முற்பகல் 11-25

அதே போல எங்களுடைய கட்சியின் சார்பிலே அவருக்கு முன்பாகவே தேர்ந்தெடுக்கப்பட்ட அக்காள் பொன்னம்மாள் இருக்கிறார்கள். 6 முறை ஒரே தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டி அம்பலம் போன்றவர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருடைய அனுபவமும் முழுமையாக இந்த அவைக்குப் பயன்பெற வேண்டும். உங்களுக்கு அவையை நடத்துவதிலே, எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும்